# மவுண்றுாயிட் தமிழ்க் கல்வி நிலையம்

## Mount Druitt Tamil Study Centre

Email : mtdruitttsc@gmail.com Mobile: 0449 892 066 Web : www.mtsc.org.au


## செய்தி மடல் 2020 – 04

**28-11-2020**

***"தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்"*** என்றார் பாரதியார். இந்த கொரோனா இடர்காலத்திலும் எமது தமிழை உயிர்மூச்சாக கொண்டு ஆர்வமுடன் கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

### 1. *வருடாந்த பரிசளிப்பு விழா 2020*

எமது பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா, முன்பள்ளி – ஆரம்பப்பள்ளி புத்தக வெளியீடு மற்றும் நத்தார் கொண்டாட்டமும் இராப்போசன விருந்தும் அரசாங்க அறிவுறுத்தல்களுக்கு அமைய சுகாதார நடைமுறைகள் மற்றும் கொரோனா பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டு எதிர்வரும் டிசம்பர் மாதம் 19ம் திகதி (19.12.2020) சனிக்கிழமை அன்று மாலை 5.30 மணிக்கு **PLUMPTON HIGH SCHOOL (141 Hyatts Road, PLUMPTON NSW 2761)** பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அனைவரும் இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பிற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்




பரிசளிப்பு விழாவுக்கான இரவு உணவு, மண்டப கட்டணம் மற்றும் இதர செலவுகளுக்காக பெற்றோர்களிடமிருந்து இவ்வருடத்திற்கு ஒரு குடும்பத்திற்கு $25.00ஐ எமது கல்வி நிலைய பொருளாளர் திரு. பேரம்பலம் மகேஸ்வரமூர்த்தி அவர்களிடம் செலுத்தி ஒவ்வொரு குடும்பத்திலும் எத்தனை அங்கத்தவர்கள் வருகை தருவார்கள் என்பதனையும் முன்கூட்டியே தெரியப்படுத்தி பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா சிறப்பாகவும் பாதுகாப்பாகவும் நடைபெற பூரணஒத்துழைப்பு வழங்குமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### 2. *ஆண்டிறுதிப் பரீட்சை 2020*

மாணவர்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சை 28.11.2020 அன்று முதல் வகுப்பு ஆசிரியர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்படும். இதில் வாசிப்பு, கேட்டு கிரகித்தல், பேசுதல், எழுத்துப்பரீட்சை என்பன அடங்கும். எனவே பரீட்சை தொடர்பான விபரங்களை உங்களது பிள்ளைகளின் வகுப்பு ஆசிரியர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளவும்.

### 3. *30வது ஆண்டு மலர் வெளியீடு*

எமது பாடசாலையின் 30வது ஆண்டு நிறைவை நினைவு கூர்ந்து இந்த வருடம் ஒரு சிறப்பு மலரை எமது பரிசளிப்பு விழாவான 19.12.2020 அன்று வெளியிடவுள்ளோம். இதன் வெளியீட்டுக்கு பாடுபட்ட மலர்குழு அங்கத்தவர்களுக்கும் ஏனைய நிர்வாகக்குழு அங்கத்தவர்கள், ஆசிரியர்கள் அவர்களுக்கும் பாடசாலை நிர்வாகம் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

### 4. *முன்பள்ளி மற்றும் ஆரம்பப்பள்ளி பாடப்புத்தக பயிற்சிப் புத்தக வெளியீடும் கௌரவிப்பும்*

எமது 30வது ஆண்டு நிறைவை நினைவு கூர்ந்து எமது பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி அனைத்து முன்பள்ளி மற்றும் ஆரம்பப்பள்ளி மாணவர்களும் பயன்பெறும் வகையில் ஒரு சிறப்பான பாட மற்றும் பயிற்சிப் புத்தகங்களை ஆசிரியர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அதன் வெளியீடும் அதற்கு பாடுபட்ட ஆசிரியர்களை கௌரவித்தலும் எமது பரிசளிப்பு விழாவில் நடைபெறவுள்ளது.

### 5. 10 வருட ஆசிரிய சேவையை பூர்த்தியடைந்த ஆசிரியரை கௌரவித்தல்

எமது பாடசாலையில் அடுத்த தலைமுறைகளுக்கு எமது தமிழை கற்பித்து மொழியையும் பண்பாட்டையும் இந்த நாட்டில் நிலைநிறுத்த பாடுபடும் ஆசிரிய சேவையில் 10 வருடத்தை நிறைவு செய்த திரு. சாமித்தம்பி கனகசிங்கம் ஆசிரியர் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் எமது பரிசளிப்பு விழாவில் நடைபெறவுள்ளது.

### 6. பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள்

இதுவரை உங்கள் பிள்ளைகளுக்கான கடந்த வருட பாடசாலைக் கட்டணம், இந்த வருடத்திற்கான பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை செலுத்த தவறியவர்கள் விரைவாக அதனை செலுத்தி எமக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த வருடம் முதல் எமது பாடசாலை Creative Kids Registered Provider ஆக அங்கீகாரம் பெற்றுள்ளதால் நீங்கள் Creative Kids Voucher மூலமும் எமது பாடசாலைக் கட்டணத்தை செலுத்தலாம். பெற்றோர் கொடுப்பனவை ஏற்கனவே பணமாகக் செலுத்திய பெற்றோர்கள், திரும்பவும் Creative Kids Voucher மூலம் அவற்றை செலுத்தி தாங்கள் ஏற்கனவே செலுத்திய பணத்தை மீண்டும் திரும்ப பெற்றுக்கொள்ளலாம் என்பதை உங்களுக்கு அறியத்தர விரும்புகிறோம். மேலதிக விபரங்களுக்கு எமது கல்விநிலைய பொருளாளர் திரு.பே.மகேஸ்வரமூர்த்தி அவர்களை தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி இல : 0422 519 067)

### 7. 2021ம் ஆண்டிற்குரிய பாடசாலை நிர்வாகக் குழு

எமது பாடசாலை இந்த வருடம் தனது முழுமையான நிகழ்ச்சி நிரலை கொரோனா பேரிடர் காரணமாக அரசாங்கம் நடைமுறைப்படுத்திய சட்டங்களுக்கு அமைய நடத்த முடியவில்லை. கடந்த இரண்டு தவணைகள் இணையவழியிலும் மற்றையவை மாணவர்களை மட்டுமே பாடசாலைக்கு அனுமதித்தும் கற்றல் நடவடிக்கைகள் நடைபெற்றது. குடும்ப குதூகல தினம், கலைவிழா கைவிடப்பட்டும் மற்றும் பேச்சுப்போட்டியில் ஒவ்வொரு வகுப்பு ரீதியான மாணவர்களின் பெற்றோர்கள் மட்டும் அனுமதித்தும் நடைபெற்றது. வாணி விழா பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் மாணவர்களை மட்டுமே பாடசாலைக்குள் அனுமதித்து நடைபெற்றது. இவ்வாறு எமது நிர்வாக அங்கத்தவர்கள் முழுமையான செயற்பாட்டை மேற்கொள்ள முடியாததினாலும் அவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குவதுடன் அரசாங்கத்தின் கொரேனா பேரிடர் நடைமுறைகளினாலும் 28.11.2020ல் நிர்வாகக்குழு கூட்டத்தில் முன்மொழியப்பட்ட ஆலோசனைக்கு அமைய பெரும்பான்மை அங்கத்தவர்களின் சம்மதத்துடன் 2020 ஆண்டு நிர்வாகக்குழு அங்கத்தவர்கள் வரும் ஆண்டான 2021லும் மாற்றங்களின்றி தொடர்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 20 அங்கத்தவர்கள் நிர்வாகத்தில் இருப்பதினால் இந்த வருடம் புதிய அங்கத்தவர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பமும் வழங்கப்படமாட்டாது என்பதையும் தங்களுக்கு தெரியப்படுத்த விரும்புகின்றோம். அத்துடன் 2020 ஆண்டில் கொரோனா பேரிடர் காரணமாக அரசாங்க அறிவுறுத்தலுக்கமைய எமது பாடசாலையின் அனைத்து பெற்றோர்களும் ஒன்றுகூடி ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் நடத்தமுடியாத ஒரு இக்கட்டான சூழல் காரணமாக இந்த ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் நடைபெற மாட்டாது. இப்பொதுக்குழுக் கூட்டம் 2021ம் ஆண்டுக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதையும் தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

இந்த வருடம் பாடசாலைக்கு பல்வேறுபட்ட சிரமங்களின் மத்தியிலும் மாணவர்களை இணையவழி கற்றலுக்கும் வகுப்பறைக்கற்றலுக்கும் அழைத்துவந்த ஒவ்வொரு பெற்றோர்களுக்கும் நிர்வாகத்தின் சார்பில் நன்றியை கூறிக்கொள்வதுடன் வழமைபோல 2021ம் ஆண்டும் பாடசாலை நிர்வாகத்திற்கு தங்களது பூரண ஆதரவினை வழங்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### 8. பாடசாலை விடுமுறை

எமது பாடசாலை தவணை நான்கின் கடைசி நாளான 19.12.2020 அன்று பரிசளிப்பு விழாவுடன் நிறைவடைந்து எதிர்வரும் 06.02.2021 சனிக்கிழமை அன்று மீண்டும் புதிய வருடத்திற்கான முதலாம் தவணைக்காக திறக்கப்படும் என்பதனையும் உங்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி



மவுண்ட்றூயிட் தமிழ் பாடசாலை நிர்வாகம்.

"தூங்கும் புலியைப் பறை
கொண்டெழுப் பினோம்
தூய தமிழரைத் தமிழ்
கொண்டெழுப் பினோம்
தீங்குறு பகைவரை
இவணின்று நீக்குவோம்
செந்தமிழ் உணர்ச்சி
வேல்கொண்டு தாக்குவோம்"

– **கவிஞர் பாரதிதாசன்**

